**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**OS.No. 106/2019**

**PW1: திரு.வைஸ்ராஜ், த/பெ. மானக்சந்த்**
**11.09.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

<u>முதல் விசாரணை</u>

நான் சென்னை கோடம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் வாதி. நான் வாதி தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 16.05.2018 தேதியிட்ட வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது **வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 1 மற்றும் 2வது பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்ததற்கான ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 14.11.2005 தேதியிட்ட 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் (ஆவண எண். 9019/2005) சான்றிட்ட நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **வா.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 09.05.2013 தேதியிட்ட அடைமான பத்திரத்தின் (ஆவண எண். 2689/2013) சான்றிட்ட நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்கச்சான்றிதழ் **வா.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 03.05.2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் (ஆவண எண். 2594/2018) சான்றிட்ட நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **வா.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**( வா.த.சா.ஆ.3, 4 மற்றும் 6 அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்து பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. ஆவணத்தின் செல்லும்படியாகும் தன்மை வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும்)**

**தாவா படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.